<u>சுருக்கம்</u>

பள்ளிக் கல்வி – தருமபுரி கல்வி மாவட்டத்தினை பிரித்து அரூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய கல்வி மாவட்டம் தோற்றுவித்தல் – புதிய கல்வி மாவட்டத்திற்கு பணியிடங்கள் அனுமதித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

<u>பள்ளிக் கல்வி (ப.க.4(1))த் துறை</u>

அரசாணை (நிலை) எண்.33 நாள்: 01.03.2018
(திருவள்ளுவராண்டு 2049
மாசி 17)
படிக்கப்பட்டவை:–

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.044387/எல்/இ3/2013, நாள் 17.04.2015, 30.12.2016, 10.06.2017, 27.07.2017 மற்றும் 30.10.2017.

*******

<u>ஆணை</u>:-

தருமபுரி மாவட்டத்தில் 07.10.2017 அன்று தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தருமபுரி மாவட்டத்தில் தருமபுரியை தலைமையிடமாகக் கொண்டுள்ள கல்வி மாவட்டத்தில் 287 அரசு பள்ளிகள் நிர்வகிக்கப்பட்டு வருவதால் நிர்வாக நலன் கருதி ஒரு புதிய கல்வி மாவட்டம் அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. பள்ளிக் கல்வி இயக்குநர் தனது கருத்துருவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க, கல்வியில் முன்னேற்றம் தேவைப்படும் தருமபுரி வருவாய் மாவட்டத்தில் 5 வட்டங்கள் அடங்கியிருப்பதாலும் தருமபுரி கல்வி மாவட்டத்தின் பரப்பளவு அதிகமாக உள்ளதாலும் அனைத்து வகை பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாலும் நிர்வாக வசதிக்காக அரூரை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக அரூர் கல்வி மாவட்டம் தோற்றுவித்து அதன் கட்டுப்பாட்டினுல் கீழ்க்கண்டவாறு 117 பள்ளிகளை கொண்டு வரலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளார்:–

| வ. எண். | கல்வி மாவட்டத்தின் பெயர் | கல்வி மாவட்டத்தில் அடங்கும் ஒன்றியங்கள் | மொத்த பள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | தருமபுரி | தருமபுரி, பென்னகரம், பாலக்கோடு, நல்லம்பள்ளி மற்றும் காரிமங்கலம் | 170 பள்ளிகள் |
| 2. | அரூர் | அரூர், மொரப்பூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி | 117 பள்ளிகள் |
| | | மொத்தம் | 287 பள்ளிகள் |

3. மேலும், தருமபுரி மாவட்டக் கல்வி அலுவலகத்தில் தற்போதுள்ள 2 கண்காணிப்பாளர்கள், 2 பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்கள், 5 உதவியாளர்கள், 2 தட்டச்சர்கள் ஆகிய பணியிடங்களில் பாதிப் பணியிடங்களை அரூர் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு பிரித்தளித்து ஒரு மாவட்டக் கல்வி அலுவலர், ஒரு மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், ஒரு பள்ளித் துணை ஆய்வாளர் மற்றும் ஒரு ஊர்தி ஓட்டுநர் பணியிடம் ஆகியவற்றை மட்டும் புதிய பணியிட ஒதுக்கீடாக வழங்கினால் போதுமானது எனவும், அரூர் மாவட்ட கல்வி அலுவலகம் ஏற்படுத்துவதால் ஏற்படும் தொடரும் செலவினம் மற்றும் தொடரா செலவினத்திற்கு ஒப்பளிப்பு வழங்குமாறும் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க பெறப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, தருமபுரி கல்வி மாவட்டத்தின் பணிச்சுமை மற்றும் நிர்வாக மேம்பாடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு அரூர், மொரப்பூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய ஒன்றியங்களை உள்ளடக்கி அரூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டக் கல்வி அலுவலகம் தோற்றுவித்து, அம்மாவட்டத்தின் கீழ் 117 பள்ளிகளை கொண்டு வர பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்தும், புதிதாக தோற்றுவிக்கப்படும் அரூர் கல்வி மாவட்டத்தின் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு கீழ்க்கண்டவாறு தொடரும் மற்றும் தொடரா செலவினங்களுக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது :-

(i) தருமபுரி கல்வி மாவட்டத்தின் கீழ் உள்ள அரூர், மொரப்பூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியங்களில் செயல்படும் 117 பள்ளிகள் புதிதாக தோற்றுவிக்கப்படும் அரூர் கல்வி மாவட்டத்தின் கீழ் செயல்படும்.

(ii) புதிதாக தோற்றுவிக்கப்படும் அரூர் கல்வி மாவட்ட அலுவலகத்திற்கு ஏற்கனவே தருமபுரி கல்வி மாவட்ட அலுவலகத்திற்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களிலிருந்து கண்காணிப்பாளர் 1, பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் 1, உதவியாளர்கள் 2, தட்டச்சர் 1 ஆகிய பணியிடங்களை பிரித்து வழங்கப்படுகிறது.

(iii) புதிய கல்வி மாவட்டத்திற்கு தேவையான ஒரு மாவட்டக் கல்வி அலுவலர், ஒரு மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், ஒரு பள்ளித் துணை ஆய்வாளர் மற்றும் ஒரு ஊர்தி ஓட்டுநர் ஆகிய 4 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுகிறது.

(iv) புதிய கல்வி மாவட்டத்திற்கு கருவிகள், தளவாடபொருட்கள் வாங்கிட தொடரா செலவினம் ரூ.3,71,000/-க்கு கீழ்க்கண்டவாறு ஒப்புதல் வழங்கப்படுகிறது :-

| வ. எண். | பொருளின் பெயர் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | ஒப்புதல் அளிக்கப்பட்ட செலவினம் ரூ. |
|---|---|---|---|
| 1. | கணினி | 1 | 40,000 |
| 2. | 2KV UPS | 1 | 30,000 |
| 3. | பிரிண்டர் | 1 | 20,000 |
| 4. | ஜெராக்ஸ் இயந்திரம் | 1 | 75,000 |
| 5. | பேக்ஸ் இயந்திரம் | 1 | 15,000 |
| 6. | தீ தடுப்பு சாதனங்கள் | 2 | 6,000 |

| | | | |
|---|---|---|---|
| 7. | பணப்பெட்டி | 1 | 6,000 |
| 8. | சைக்கிள் | 1 | 3,000 |
| 9. | மேசை மற்றும் நாற்காலி முதலானவை | 1 | 1,74,000 |
| 10. | தொலைபேசி அகண்ட அலைவரிசையுடன் | 1 | 2,000 |
| | மொத்தம் | — | 3,71,000/– |

(v) மின் கட்டணம் மற்றும் இதர அலுவலக செலவினங்களுக்கான ஓராண்டிற்கு தொடர் செலவினம் ரூ.1,30,000/–க்கு கீழ்க்காணுமாறு ஒப்புதல் வழங்கப்படுகிறது:–

| வ. எண். | பொருளின் பெயர் | அனுமதிக்கப்பட்ட செலவினம் ரூ. |
|---|---|---|
| 1. | மின் கட்டணம் | 40,000 |
| 2. | அவசர செலவுகள் | 40,000 |
| 3. | பயணப்படி | 25,000 |
| 4. | தபால் கட்டணம் | 20,000 |
| 5. | நிரந்தர முன்பணம் | 5,000 |
| | மொத்தம் | 1,30,000 |

(vi) பணியாளர்களுக்கான ஊதியம் தொடர்பான தொடரும் செலவினம் ஓராண்டிற்கு ரூ.18,60,000/–க்கு கீழ்க்காணுமாறு ஒப்புதல் வழங்கப்படுகிறது:–

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | உத்தேச ஆண்டு ஊதியம் ரூ. |
|---|---|---|---|
| 1. | மாவட்டக் கல்வி அலுவலர் | 1 | 6,60,000 |
| 2. | மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் | 1 | 4,92,000 |
| 3. | பள்ளித் துணை ஆய்வாளர் | 1 | 4,68,000 |
| 4. | ஊர்தி ஓட்டுநர் | 1 | 2,40,000 |
| | | மொத்தம் | 18,60,000 |

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

தொடரும் செலவினங்கள்
2202–பொதுக் கல்வி –02 இடைநிலைக் கல்வி–101 ஆய்வு – மாநிலச் செலவினங்கள் –AA- பொது பள்ளிகளின் ஆய்வு –01 சம்பளங்கள் (த.தொ.கு.எண்.2202 02 101 AA 0104)

ரூ.1000/–

2202 02 101 AA 04 01
(த.தொ.கு.எண்.2202 02 101 AA 0417) ரூ.25,000/–

2202 02 101 AA 05 02
(த.தொ.கு.எண்.2202 02 101 AA 0524)

ரூ.40,000/-

2202 02 101 AA 05 03
(த.தொ.கு.எண்.2202 02 101 AA 0533)

ரூ.40,000/-

2202 02 101 AA 05 04
(த.தொ.கு.எண்.2202 02 101 AA 0542)

ரூ.20,000/-

2202 02 101 AA 05 05
(த.தொ.கு.எண்.2202 02 101 AA 0551)

ரூ.1,74,000/-

2202 02 101 AA 50 00
(த.தொ.கு.எண்.2202 02 101 AA 5001)

ரூ.5,000/-

தொடரா செலவினங்கள்
2202 02 101 AA 76 01
(த.தொ.கு.எண்.2202 02 101 AA 7616)

ரூ.90,000/-

2202 02 101 AA 19 01
(த.தொ.கு.எண்.2202 02 101 AA 1916)

ரூ.90,000/-

2202 02 101 AA 20 01
(த.தொ.கு.எண்.2202 02 101 AA 2013)

ரூ.12,000/-

2202 02 101 AA 21 00
(த.தொ.கு.எண்.2202 02 101 AA 2102)

ரூ.3,000/-

2202 02 101 AA 05 01
(த.தொ.கு.எண்.2202 02 101 AA 0515)

ரூ.2,000/-

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் "புதுப்பணித்திட்டம்" (NEW SERVICE) குறித்ததாகும். இதற்கு சட்டப்பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறும் வரை, செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதி (Contingency Fund) முன்பணம் மூலம் மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு செலவு பொது-I) துறையில் தனியாக வெளியிடப்படும். உடனடி செலவுக்கான தொகையினை கணக்கிட்டு அதனை எதிர்பாரா செலவு நிதி முன்பணமாக பெறுவதற்கு விண்ணப்பதை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் இருபடிகளில் நிதி (வரவு செலவு பொது-I) துறைக்கு சமர்ப்பிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினம் மீது சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு, 2018-2019 ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates) சேர்த்திட ஏதுவாக துணை குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (கல்வி-II)த் துறைக்கு அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் கோப்பு எண்.9658/கல்வி-II, 26.02.2018 மற்றும் அ.சா.எண்.10443 / மை.ம.ஆ.பி, நாள்: 26.02.2018-ல் பெற்ற ஒப்புதலுடன்

வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.2834 (இரண்டாயிரத்து எண்ணூற்று முப்பத்து நான்கு)

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை–6.
பள்ளிச்சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை–6
மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்ககம், சென்னை–6.
தமிழ்நாடு பாடநூல் கழகம், சென்னை–6.
செயலர், உறுப்பினர்–செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6.
பொது நூலக இயக்குநர், சென்னை–2.
முதன்மைக் கல்வி அலுவலர், தருமபுரி.
மாவட்டக் கல்வி அலுவலர், தருமபுரி.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், தருமபுரி.
மாவட்டக் கருவூல அலுவலர், தருமபுரி.
<u>நகல்:–</u>
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)(BG-1, BG-II)த் துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதி அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
இ.கோ/உபரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.